ARCHUNA

# அர்ச்சுனா

மாத இதழ்

50 ரூபா

கல்வி முயற்சி பெருவாழ்வு

ஜூன் 2011




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீண்டும் தொடங்கும் மிடுக்கு

அன்பான வளரும் செல்வங்களே

உங்கள் அறிவு, திறமை, ஆற்றல் அனைத்தையும் நீங்களே அறிந்து கொள்ளும் நோக்குடன், சிறந்தொரு வாய்ப்பினை வழங்க இதோ உங்கள் சஞ்சிகையான அர்ச்சுனா வந்திருக்கிறேன்.

மீண்டும் தொடங்கும் எனது மிடுக்கான பயணத்தில் நீங்கள் எல்லோருமே என்னுடன் இணைந்து கொள்ளுங்கள், கேட்டல், பேசுதல் ஆகிய திறன்களை அடுத்து வாசித்தல், எழுதுதல் ஆகிய வலிமை மிக்க ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள அர்ச்சுனா உங்களோடு கல்விக் களத்தில் இணைந்துள்ளான்.

வாசியுங்கள், எழுதுங்கள் வளமான எதிர்காலத்தை நோக்கிய சத்தியத்தின் பாதையில் தலைவர்களாய் ஒளிருங்கள்.

அர்ச்சுனா, இதோ உங்கள் கரங்களில்.

மாதம் தவறாமல் உங்களை நாடி வருவான். அர்ச்சுனாவின் வருகை உங்கள் ஆக்கங்களைத் தன்னகத்தேந்தி என்றும் உங்களை மகிழ்விக்கும்.


அறிவால் ஆற்றலால் உங்களின் வளரும் சிந்தையையும் செயலையும் சிறப்பிக்கும்.

அர்ச்சுனாவுடன் இணைந்து கொள்ளுங்கள். இந்தப் பேருலகின் உண்மைகளைத் அறிந்துயரும் ஆற்றல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நாளைய உலகம் உங்களுடையது. நவ நவமான கருத்துக்கள் செயற்றிறன்களால் எதிர்காலத்தை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்.

மீண்டும் சந்திப்போம்

ஆசிரியர்



## நீதி

நீதி என்பது பொது ஒழுக்கம். ஒரு கிராமத்தில் வலியவனுக்கு வேறு நியாயம் எளியவனுக்கு வேறு நியாயம் இருந்தால், அங்குள்ள நீதிக்காரரை உடனே மாற்ற வேண்டும். இல்லாவிட்டால், கிராமம் விரைவில் அழிந்து விடும். ஜனங்கள் குற்றம் செய்யாமல் நீதிக்காரர் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்காரர் குற்றம் செய்யாமல் ஜனங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்காரரிலே இரண்டு பெரிய பிரிவு உண்டு. நியாயஸ்தலத்திலிருந்து நீதியைப் பரிபாலனஞ் செய்வோர் ஒரு பகுதி சட்ட சபைகளிலிருந்து விதிகள் ஏற்படுத்துவோர் மற்றொரு பகுதி இவ்விரு திறத்தாரும் கோணல் வழியிலே இறங்காமல் அடக்க வேண்டிய பொறுப்பு பொது ஜனங்களைச் சேர்ந்தது.

(மகாகவி பாரதியாரின் கட்டுரைகளிலிருந்து)

அர்ச்சுனாவில் வெளிவரும் கதை கவிதை கட்டுரைகளின் கருத்துக்கள் யாவும் அவற்றைப் படைத்த படைப்பாளிகளையே சார்ந்து நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது ஆயிரம் வருடங்களுக்கு மேலாகப் பழமை வாய்ந்த சீன விளையாட்டாகும் சதுரமானதும் நீங்கள் விரும்பிய நிறத்தைக் கொண்டதுமான காகித அட்டை ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதனைக் அருகில் காட்டப்பட்டுள்ளவாறு ஏழு துண்டங்களாக வெட்டிப் பிரித்துக்கொள்ளுங்கள் அந்த ஏழு துண்டங்களையும் நீங்கள் மீண்டும் இணைத்து முக்கோணி, இணைகரம், போன்ற கணித உருக்க ளையும் மனிதர்களின் நடத்தல், ஆடுதல், ஓடுதல் போன்ற நிலைகளையும் பறவைகள், படகுகள் போன்றவற்றையும் உருவாக்கலாம். முயன்று பாருங்கள்.



# செய்து பாருங்கள்

## ரன்கிராம் (TANGRAM)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. வாகீஸ்

# பனை மரம்

தெங்கு பனை பதப்படுத்திப் பங்கமிலாப் பொருள் சேர்ப்போம்
பாங்கான பனங்கிழங்கு ஒடியல்வகை சேர்த்திடுவோம்
பதநீரைப் பதப்படுத்தி பனை வெல்லம் ஆக்கிடுவோம்
மிதமான கள் அதனில் மதுசாரம் எடுத்திடுவோம்
மிகையான வருவாயில் மீதமதைச் சேர்த்திடுவோம்
பதமான நுங்கதனை மருந்தாக ஆக்கிடுவோம்
பக்குவமாய் ஓலைவெட்டி பயன்கள் பல பெற்றிடுவோம்
பனங்களியைப் பனாட்டாக்கிப் பசிக்குணவாய்ப் புசித்திடுவோம்
பனை ஈயும் விதை எதையும் அநியாயம் ஆகவிடோம்
நல்ல பனம் விதைசேர்த்து நற்பனையாய் வளர்த்திடுவோம்
பதமான ஓலை வார்ந்து பலநூறு பொருள் செய்வோம்
பாரியென ஈய்ந்துவக்கும் பனை மரத்தைப் பேணிடுவோம்



உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரம் இத்தாலியில் உள்ள பைசா நகரில் உள்ளது. 1174இல் போனானோ பிஸ்ஸானோ என்பவரால் இக் கோபுரம் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன சதுப்பு நிலத்தில் கட்டப்பட்ட காரணத்தால் பத்தரை மீற்றர் உயர்ந்ததுமே இலேசாக இது சரிய ஆரம்பித்தது. போனானோ அவர்கள் கட்டடத்தை உயர்த்திச் செல்லும் போது அதனைச் சரி செய்துவிடலாம் என எண்ணினார் மூன்று மாடிகள் கட்டிய பின்னர் அதற்கும் மேலே கட்டுவதை அவர் நிறுத்திவிட்டார் அதனைத் தொடர்ந்து டோமாஸ்ஸோ பிஸ்ஸானோ என்பவர் எட்டு மாடிகள் வரை கட்டினார். 1350இல் 54மீற்றர உயரம் கொண்ட பைசா கோபுரம் முற்றுப் பெற்றது. வட்ட வடிவில மைந்த மாடிகள்கொண்ட இக்கோபுரம் மூன்று மீற்றர் ஆழத்தை மாத்திரம் அத்திவாரமாக் கொண்டுள்ளது. மாடிகளுக்குச் செல்லும் சுற்று மாடிப் படிகள் கோபுரத்தின் மேலே செல்ல உதவுகின்றன. 293 படிகள் வரை அங்குள்ளன. கோபுரத்தின் உச்சியில் நின்று பார்த்தால் அபுலியஸ் மலைத்தொடரும் மெடிற்றேனியன் கடலும் அழகாகத் தோற்றமளிக்கும்.

# சாய்ந்து போகும் கோபுரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னக் கரடி புறோம்

சின்னக் கரடி புறோம் மரங்களுக்கிடையே நடந்து வந்து கொண்டிருந்தது. அது தனது தாயாரின் பிறந்த நாளைக் கொண்டாட நினைத்துக் கொஞ்சப் பூக்களைப் பிடுங்கி வரப் புறப்பட்டது. மனதுக்குள்ளே பாட்டுப் பாடியவாறு நடந்து சென்றது. அது போகும் பாதையில் ஒரு வாய்க்காலைக் கடந்து செல்ல வேண்டி இருந்தது. வாய்க்காலுக்கு அக்கரையில் அழகிய பூக்கள் காணப்பட்டன. அவற்றைப் பறிக்க புறோம் விரும்பியது. ஆனால் மறுகரைக்குச் செல்ல ஒரு ஒடுங்கிய மரத்தட்டின் மீது நடந்து செல்ல வேண்டியிருந்தது.

மிகவும் கவனமாக அந்தக் கரடி அத்தட்டின் மீது நடந்து சென்றது. சிறிது தூரம் சென்றதும் தட்டு அங்குமிங்குமாக ஆடியது. கரடி பயந்தது.



ஆயினும் முயற்சித்துத் தட்டின்மீது அது நடந்தபோது கீழே நீரில் ஏதோ ஒன்று தெரிந்தது. அதனைக் கண்ட கரடி மேலும் பயந்தது. உடனேயே அந்தத் தட்டிலிருந்து மீண்டும் கரைக்கு இறங்கியது அப்பால் செல்ல அதனால் முடியவில்லை அது மிகவும் பயத்தோடு காணப்பட்டது.

எவ்வாறெனினும் அடுத்த பக்கத்திற்குச் செல்ல அது விரும்பியது அதன் கண்களில் கண்ணீர் வந்தது. அப்பொழுது அங்கு வந்த ஒரு நரி என்ன நடந்தது? எனக் கரடியிடம் விசாரித்தது.

எவ்வாறெனினும் அக்கரைக்குச் சென்று பூப்பறிக்க வேண்டும் ஆனால் அங்கே ஒரு பயங்கர மிருகம் என்னைப் பயமுறுத்துகிறது எனக்குப் பயமாக இருக்கிறது என்னிடம் துணிவு இல்லை என்று சொல்லிக் கரடி வருத்தப்பட்டது. நரி உடனே அதற்கு என்ன செய்ய வேண்டும் தெரியுமா? என்று கேட்டது.

அத்துடன் மீண்டும் முயற்சி செய் அந்த மிருகத்தை மீண்டும் பார்த்தால் அதனைக் கோபத்தோடு முறைத்துப் பார் அது பயந்து ஓடிவிடும் என்றது.

சின்னக் கரடி பாலத்தால் மீண்டும் சென்றது. அந்த மிருகத்தைக் கண்டது அதனைக் கோபத்துடன் பார்த்தது. அதனைப் பார்த்து முன்னரை விடவும் பயந்த கரடி ஓட்டமாகத் திரும்பியது

மீண்டும் செல்வதற்கு அதற்குத் துணிவு வரவில்லை. எவ்வாறெனினும் அக்கரைக்குச் சென்று பூப்பறிக்க வேண்டுமே என்ற கவலையோடு அது இக்கரையில் நின்றது. அப்பொழுது ஒரு ஓநாய் அங்கு வந்தது. ஓநாயைக் கண்டதும் கோபத்துடன் நரி அந்தப் பயங்கர மிருகத்தை பார்க்கச் சொன்ன கதை தொடக்கம் நடந்து முடிந்தவைகள் முழுவதையும் கூறிப் பயங்கர மிருகத்தை விரட்ட என்ன செய்யலாம்? என ஓநாயிடம் உபாயம் கேட்டது.

அதற்கு ஓநாய் அந்த மிருகமோ பலம் வாய்ந்தது. இம்முறை நீ உன்னுடன் தடி ஒன்றை எடுத்துச் சென்றால் அது பயந்து ஓடிவிடும் என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸ். செல்வராஜா**

"சரி அவ்வாறே செய்ய முயற்சிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு ஒரு தடியைத் தன்னுடன் எடுத்துச் சென்றது. அது இம்முறை மிகவும் கவனமாக அந்தப் பாலத்திலுள்ள தட்டில் மெல்ல நடந்தது. ஆனால் கரடி முன்னரை விடவும் அதிக பயத்துடன் திரும்பக் கரைக்கு ஓடி வந்தது.

அது கரைக்கு வந்ததும் தனது இயலாமையை எண்ணி அழத் தொடங்கியது.

கரடி எதனைக் கண்டு பயப்பட்டது என்பதை யாருமேஅறியவில்லை.

கரடி அழுது கொண்டிருப்பதை மரத்திலிருந்து கண்ட ஆந்தை ஒன்று "ஏன் இவ்வாற உரத்து அழுகிறீர்?" என்று கேட்டது.

அதற்கு சின்னக் கரடி "எனது அம்மாவுக்குப் பிறந்த நாள் நான் பூப்பறிக்க வேண்டும்" என்று சொல்லிக் கேவி கேவி அழுதது. தண்ணீருக்குள் மிருகம் ஒன்று நிற்கிறது. ஆகவே பாலத்தைக் கடக்க என்னால் முடியவில்வை. எனக்குத் துணிவு இல்லை. அது என்னை முறைத்துப் பார்க்கிறது. நானும் முறைத்துப் பார்த்தேன். தடி கொண்டு சென்றேன். ஒன்றுக்கும் அது அசைந்து கொடுக்கவில்லை என்றது.

ஆந்தைக்கு உண்மை தெளிவானது. அங்கே தண்ணீரில் தெரிபவர் யார் என்பதைத் தெரிந்து கொண்டது உடனே ஆந்தை எனக்குப் புரிகிறது அதற்கு என்ன செய்ய வேண்டும் தெரியுமா? நான் சொல்லுகிறபடி ஒருமுறை முயற்சித்துப்பார்? என்றது.


அதைக் கேட்ட கரடி நான் என்ன செய்ய வேண்டும். சொல்லு என்று கெஞ்சியது.

நீ பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டாம் அந்த மிருகத்தைப் பார்த்ததும் புன்னகை செய்தால் போதும் என்றது ஆந்தை. அதனைக் கேட்ட சின்னக் கரடி அவ்வாறே செய்தது.

இம்முறை முன்னர் நடந்தது போல் கரடிக்குப் பயமாக இருக்கவில்லை. அந்த மிருகமும் பதிலுக்குப் புன்னகை செய்தது. அதனைப் பார்த்துப் பயப்படாமல் அக்கரைக்குச் சென்ற கரடி பூக்களைப் பறித்துக் கொண்டு திரும்பியது.

சின்னக்கரடி புறோம் எதனைக் கண்டது என்பதை உங்களால் ஊகிக்க முடிகிறதா?

சின்னக் கரடி பாட்டுப் பாடிக் கொண்டே பூக்களைப் பறித்துக் கொண்டுஅவ்வழியாகவே தாயாரிடம் திரும்பியது. தாயாரின் பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடியது.



# அன்னை

பத்து திங்கள்
கருவறையில் சுமந்தவள்
என் பிறப்புக்காய்
தன்னை வருத்தியவள்
உதிரத்தை உணவாக்கி
உயிர் கொடுத்தவள்
மீண்டும் வருவாளா
ஓலமிட்ட மனம்
அமைதி கொண்டு
மௌனமாய் அழுகிறது அவள்
வரும் திசை பார்த்து !



சுரேஸ் சாதுர்யன் | தரம் 04
ரோமன் கத்தோலிக்க பாடசாலை இளவாலை

வில்வம் பசுபதி



# லப்பாம் டப்பாம்

**புளியங்காடு** என்ற கிராமத்தில் லப்பாம் டப்பாம் என்ற இரு சிறுவர்கள் வா ந்து வந்தார்கள். இவர்களுக்கு இந்த விநோத யர் இடப்பட்ட காரணம் வெடிக்கையானது.


இவர்கள் இரணைப்பிள்ளைகள் இவர்களுடைய பெற்றோர் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி அறிவு இல்லாத ஏழைகள் இரணைப்பிள்ளைகள் பிறந்ததும் அக்கிராமத்தில் வாழ்ந்த பி லமான பூனைக்குட்டி சாத்திரியாரிடம் போய் பெயர் வைப்பதற்கு ஆலோசனை கேட்டார்கள். சாத்திரியார் பஞ்சாங்கத்தை பார்த்து விட்டு 'ல' வரியிலும் 'ட' வரியிலும் பெயர் வையுங்கோ என்று சொல்லி விட்டார். பெற்றோருக்கோ ஒரு பெயரும் புலப்படவில்லை. உற்றார் உறவினர் கூடி ஆலோசித்தனர் இறுதியில் லப்பாம் டப்பாம் என்று வைப்பது என்று தீர்மானித்தனர்.

லப்பாம் டப்பாம் இருவரும் பெயருக்கு ஏற்ப லட்டு மாதிரி மத மத வென்று வளர்ந்தனர் ஆனால் மூளை தான் வளர மறுத்து விட்டது. ஒவ்வொரு வகுப்பையும் பொறுமையாக இரண்டு வருடம் படித்து ஆசிரியர்களுடைய பொறுமையை சோதித்தார்கள். ஆறாம் வகுப்பு வரை படித்ததே அவர்களுக்குப் பெரிய சாதனையாக இருந்தது.

லப்பாம் டப்பாம் இருவரும் ஒன்றாகவே பள்ளிக்குப் போவார்கள். வழியில் நாயைக் கண்டால் அதை துரத்திக் கண்ணுக்கு கெட்டாத தூரம் வரை அது மறையும் வரையில் வீதியில் நிற்பார்கள். போகும் வழியில் வேறு எந்த மிருகத்தை கண்டாலும் அதனுடன் விளையாடிப் பொழுதைப் போக்குவார்கள். இறுதியில் அவர்கள் பள்ளியை சென்றடையும் போது முதலாவது பாடம் முடிவடைந்து விடும்.

தன் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலை போவது பற்றி தாய்க்கு மிகுந்த மகிழ்ச்சி. அவர்கள் பாடசாலைக்குப் போவது விளையாடுவதற்கு அன்றி படிப்பதற்கு அல்ல என்பதை பெற்றோர் அறியவில்லை. ஒரு நாள் தாய் லப்பாமை கேட்டாள் "லப்பாம் உனக்கு இங்கிலிசு சொல்லி தாறாங்களா" என்று. லப்பாமுக்கு

இங்கிலிசில் நாலு எழுத்துக்கள் மட்டுமே தெரியும். அதில் அவனுக்கு பெருமைஅதிகம். உடனே அவன் "அம்மோய் என்ன அப்பிடி கேட்டுட்டாய் நான் இங்கி லிசில் பேசுவேனே!" தாய்க்கு பெரிய மகிழ்ச்சி. "லப் பாம் இங்கிலிசில் பேசடா பார்ப்போம்". உடனே லப் பாம் "ஏ பி சி டி கிழவன்ட தாடி வந்தா வாடி வராட்டிப் போடி" என்றான். தாய்க்கு ஒன்றுமே



விளங்கவில்லை. ஆனால் தன் மகன் இங்கிலிசில் பேசுகிறான் என்று எண்ணி ஆசையுடன் அவனின் கன்னத்தை வருடினாள். லப்பாமிற்கு நடந்த மரியாதையை கண்டதும் டப்பாமிற்கு பொறாமை யாக இருந்தது. "அம் மோய் நானும் இங்கிலிசில் பேசு வேனே" என்றான். டப்பாம் பேசடா கேப்பம் என்றாள் உடனே தாய். தன்னுடைய இங்கிலிசை எடுத்து விட் டான். "கம் ஒ கோ சிக்காகோ வந்த வா வராட்டிப் போ" என்றான். தாயுக்கு ஒன்றுமே பிடிபடவில்லை. தன்னுடைய பிள்ளைகள் என்னமாதிரி இங்கிலிஸில் பேசுகிறார்கள் என்று எண்ணி அக மகிழ்ந்தாள்.

லப்பாம் டப்பாம் இருவரினதும் விவேகம் அற்ற பேச்சுக்களும் செயல்களும் கிராம மக்களுக்கு நன்கு தெரிந்து இருந்ததனால் இவர்களை பார்க்கும் போது அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.

ஒரு நாள் அமாவாசை விரதம் பிடிக்க எண்ணிய தாய் எப்போது அமாவாசை என்று தெரியாமல் பூனைக்குட்டி சாத்திரியாரிடம் அனுப்பினாள். லப்பாம் டப்பாம் இருவருக்கும் புத்தி சொல்லி அனுப்பினாள். சாத்திரியார் சொல்லுவதை மறக்கமல் அப்படியே வந்து செல்ல வேண்டும் என்று சொல் லியிருந்தாள். இருவரும் பூனைக்குட்டி சாத்திரியார் வீட்டுக்குப் போன போது சாத்திரியார் விறாந்தையில் இருந்தார். இவர்களை கண்டதும் சிரித்துக்கொண்டே "என்ன விஷயம் ஏன் ஒடி வாறிகள்" என்றார்.

"சாத்திரி மாமா அமவாசை எப்போ என்று அம்மா கேட்க சொன்னா" என்று இருவருமே ஒரே நேரத்தில் சொன்னார்கள். சாத்திரியாருக்கு ஞாபகமில்லை. "இண்டைக்கோ நாளைக்கோ தெரியவில்லை" என்று சொன்னவர் பஞ்சாங்கத்தை பார்க்க உள்ளே போனார். உள்ளே போனதும் இருவரும் வீட்டுக்கு புறப்பட்டார் கள்.

"இண்டைக்கோ நாளைக்கோ என்று சொன்னார். அதை பாடமாக்கி கொண்டு போவோமா" என்றான் லப் பாம். "நான் இண்டைக்கோ என்று பாடம் ஆக்கி றன். நீ நாளைக்கோ என்று பாடம் ஆக்கு இல்லாட்டி மறந்து போவோம்" என்றான் டப்பாம். இருவரும் ஒவ்வொரு வராக இண்டைக்கோ நாளைக்கோ என்று உரத்துச் சொல்லி கொண்டு போனார்கள்.

வீதியில் இவர்களை பார்த்தவர்களுக்கு வேடிக்கை யாகவும் வினோதமாகவும் இருந்தது. இவர்கள் இப்படிப் போகும் போது வீதியில் ஒரு மாட்டு வண்டியை கண்டார்கள். உடனே அவ்விடத்தில் நின்று மாட்டு வண்டியை வேடிக்கை பார்த்தார்கள். அவர்கள் அப்படி பார்க் கும் போதும் அவர்களுடைய வாய் இண்டைக்கோ நாளைக்கோ என்று உரத் துச் சொல்லியபடி இருந்தது.




நோயினால் பீடிக்கப்பட்ட பெண் மணியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவதற் காக உறவினர்கள் வந்திருந்தார்கள்.

நோயாளியை வண்டிலில் ஏற்றும் போது லப்பாம் "இண்டைக்கோ" என்று சொன்னான். உடனே டப் பாம் "நாளைக்கோ" என்று சொன்னான். இவர்கள் சொல்லுவதை கேட்டதும் பெண் நோயாளியின் உற வினர்களுக்கு ஆத்திரம் வந்தது. இருவருக்கும் நல்ல அடி கொடுத்தார்கள். அடித்த பின்பு தான் இவர்கள் விவேக மற்ற மூடர்கள் என்பதை உணர்ந்தார்கள்.

டேய் பெடியன்கள் நோயாளி நல்லா வரவேண்டும் என்று கடவுளை கும்பிடுங்கோ ஓடுங்கிடா என்று சொல்லி விரட்டினார்கள். லப்பாம் டப்பாம் இருவருமே இப்படி ஒரு போதும் அடி உதை வாங்கியது கிடையது. அவர்கள் ஏன் அடித்தார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் அவர்களுக்கு புரியவில்லை.

அவர்கள் சொன்னபடியே "நல்லா வரவேணும்" என்று உரக்க சொல்லிக்கொண்டே வீட்டுக்கு போனார்கள். வீதியால் அவர்கள் போய் கொண்டு இருந்த போது ஒரு விளையாட்டு மைதானம் இருந்தது. அந்த மைதானத்தில் கிறிக்கட் விளையாடுவதற்கு தயாராக நின்ற இளைஞர்கள் மழை வந்துவிடுமோ மழை வந்து எங்கள் விளையாட்டை குழப் பிவிடுமோ என்ற அச்சத்தில் மழை வரக்கூடாது என்று பிரார்த்தனை செய்து விட்டு விளையாட்டை ஆரம் பித்தனர்.

துரதிஸ்டவசமாக அந்த நேரம் பார்த்து லப்பாமும் டப்பாமும் நல்லா வரவேணும் நல்லா வரவேணும் என்று சொல்லி கொண்டு அங்குநின்றனர். விளையாடிக்கொண்டிருந்த அந்த இளைஞர்கள் ஒரு கணம் விளையாட்டை நிறுத்தி விட்டு லப்பாம் டப்பாம் இருவரையும் பார்த்தார்கள். மழை வரக்கூடாது என்று நாங்கள் பிரார்த்திக்க இந்த மூடர்கள் நல்லா வரவேணும் என்று சொல்லுகிறார்களே என ஆத்திரப் பட்டார்கள்.

> ஓடுங்கிடா என்று சொல்லிவிரட்டினார்கள். லப்பாம் டப்பாம் இருவருமே இப்படி ஒரு போதும் அடி உதை வாங்கியது கிடையது. அவர்கள் ஏன் அடித்தார்கள் என்பதும் அவர்களுக்கு புரியவில்லை.



இவர்கள் இருவரும் தங்களை கேலி செய்வதாகவும் வேண்டும் என்றே நல்லா வரவேணும் என்று சொல்லுகிறார்கள் என இளைஞர்கள் நினைத்தார்கள். உடனே தங்கள் ஆத்திரம் தீர அடியும் உதையும் கொடுத்து லப்பாமையும் டப்பாமையும் விரட்டினார்கள். அதனால் ஓட்டமும் நடையுமாக வீடு நோக்கி போனார்கள். ஓடும் போதும் கூட நல்லா வரவேணும் என்ற மந்திரத்தை உரத்துச் சொல்லிக்கொண்டே ஓடினார்கள். வீட்டை அடைந்ததும் சாத்திரியார் என்ன சொன்னார் எப்ப அமாவாசை என்று தாய் கேட்டாள். இருவரும் ஒரே நேரத்தில் "நல்லா வரவேணும்" என்று சொன்னார்கள். தாய்க்கு ஒன்றுமே விளங்கவில்லை லப்பாம் சொன்னான் "அம்மோய் சாத்திரியார் ஆட்களை விட்டு அடிச்சு போட்டார் நாங்கள் இனி அந்தப் பக்கமே போக மாட்டோம். அம்மோய் இன்டைக்கு வேண்டிய அடி போல பள்ளியிலாச்சும் வாங்க வில்லை" என்றான் டப்பாம். தாய்க்கு ஒன்றுமே புரியவில்லை.

தொடரும்

செ. மகேந்திரன்

வளரும் பிள்ளைகள் - நாட்டை
வளர்க்கும் பிள்ளைகள்
உளமும் உடலும் உறுதியாக
உழைக்கும் பிள்ளைகள்

கல்வி செல்வமும் - வீரம்
காணும் வெற்றியும்
வல்லதாகும் வாழ்வை நோக்கும்
வளங்கள் பெருகிடும்

அன்பும் நீதியும் - இன்பம்
ஆளும் நண்பரும்
துன்பமின்றி வாழ வைக்கும்
துணிவும் ஆயுதம்

ஒன்றி வாழ்தலும் - கருணை
ஒழுக்கம் பேணலும்
நன்றிருக்க நன்மைசெய்து
நாட்டை உயர்த்துவோம்






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஓர் ஊரில் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர். எவருக்காவது ஏதாவது கொடுத்துக்கொண்டு இருப்பார். அவர் ஒரு கொடையாளி. தினமும் ஒருவருக்கு ஏதாவது கொடுக்கவில்லை என்றால் அவருக்குத் தூக்கம் வராது அப்படி ஒரு பழக்கம். அது மட்டுமல்ல அவர் கொடுப்பதை அடுத்தவர் அறியக் கூடாது என்பது அவரது விருப்பம். இரகசியமாக கொடுப்பார்.**

■ தென்கச்சி சுவாமிநாதன்

வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது என்றும் எண்ணுவபர். ஒரு நாள் இரவு அவர் தயாராக கட்டிவைத்திருந்த பண முடிச்சை கையில் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்தார். தெருவில் நடந்தார். இன்றைக்கு யாருக்கு தருமம் செய்வது என்று எண்ணிய படியே இருட்டில் நடந்து சென்றார். ஒருவர் செய்யவேண்டும் என்று முடிவெடுத்தார். இரவு வந்தது. வழக்கம் போல பண முடிச்சுடன் தெருவில் இறங்கினார். எதிரில் ஒரு பெண் உருவம் மங்கலாய்த் தெரிந்தது. உடனே தனது கையில் இருந்த பண முடிச்சை அந்தப் பெண்ணிடம் கொடுத்து விட்டுத் திரும்பி விட்டார்.

மறுநாள் காலையில் நேற்று இரவு நெறி தவறி நடக்கும் ஒரு பெண்ணின் கையில் யாரோ ஒருவர் பணத்தைக் கொடுத்து விட்டு போய் இருக்கிறார் என்று ஊர் முழுவதும் பேசிக் கொண்டார்கள். அடடா இன்றும் தவறுதலாக நடந்து விட்டதே என்று வருத்தப்பட்டார். மூன்றாம் நாள் இரவும் பண முடிச்சுடன் புறப்பட்டார். இப்பொழுது அவர் எதிரில் ஒருவர் வந்தார்.



# இரவில் வெளிச்சம்

[illegible] வருவது தெரிந்தது. உடனே அவரிடம் போனார். கையில் இருந்த பண முடிச்சை யாருக்கும் தெரியாமலே அவசர அவசரமாக அவரது கையில் திணித்து விட்டார். அப்பாடா யாருக்கும் தெரியாமல் இன்றும் தருமம் செய்தாகி விட்டது என்று மகிழ்ந்தார். அவர் முகத்தில் ஒரு மகிழ்ச்சி மனநிறைவு நிம்மதியாகத் தூங்கி எழுந்தார்.

மறுநாள் காலையில் ஊர் முழுவதும் ஒரே பேச்சு. நேற்று இராத்திரி ஒரு திருடன் கையிலே யாரோ ஒருவர் பணத்தை கொடுத்து விட்டுப் போனாராம் என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

அதனைக் கேள்வியுற்ற அந்த பெரியவர் மிகவும் வருத்தப்பட்டார். போயும் போயும் ஒரு திருடனுக்கா உதவி செய்து இருக்கிறோம். எனது கொடை பிரயோசனமில்லாமல் போய்விட்டதே என்று நினைத்தார். யாராவது உதவி தேவைப்படுவோருக்கு உதவி அவரிடம் இவர் பணத்தை கொடுத்து விட்டு வந்து விட்டார்.

மறுநாள் நேற்று இரவு ஒரு செல்வந்தர் கையில் பணத்தைக் கொடுத்து விட்டு போய் இருக்கிறார் என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. என்ன இது தினமும் இப்படி ஆகிறதே என்று நினைத்துக்கொண்டே படுத்து உறங்கினார்.

அன்று இரவு அவரது கனவில் இறைவன் தோன்றினார். இதோ பாரப்பா நீ கொடுத்த தருமம் வீணாகவில்லை உன்னிடம் பணம் வாங்கிய திருடன் திருந்தி விட்டான். அந்த பெண்ணும் திருந்தி விட்டாள். அந்த செல்வந்தனோ கொடையாளி ஆகி விட்டான். நல்ல மனதுடன் தர்மம் செய்தாய். அது வீணாகவில்லை. தர்மம் தன்னை மட்டும்மல்ல அடுத்தவர்களையும் தீமையில் இருந்து காப்பாற்றும் என்றார் •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டறியாதது

## "தேங்காய் விழுகுது"

**கந்தையா**

அடுப்பிலே சோறு, சாய்ச்சாய் அது கரைந்திடுமே!
அங்கே
குடத்திலே நீரில்லை! கோயிலுக்குப் போய்விட்டா,
பழஞ்சோறு மில்லையே! பச்சடி அரைப்பதற்கு.
தேங்காயு மில்லையிது திருவிழாத் தானின்று.

**வடிவேலு**

ஏன்காணும் கந்தையா இவ்வளவு துள்ளுகிறாய்
தேங்காய்தான் பிடுங்குவது மினக்கேடா துயரைவிடு
போங்காணும் போய்க்கொக்கை கொண்டாரும்
அதுபோக
ஏன்தான்நீ அவசரமாய் எவ்விடந்தான் போவோணும்

**கந்தையா**

கொக்கையையும் காணவில்லை காசெடுக்கவோ
கொட்டைப்
பெட்டியையும் காணவில்லை சந்தைக்குப்
போவதெப்போ?
வைத்தவைகள் வைத்தபடி இருந்தாற்றானே மனிசன்
எப்படியேன் ஏதேனும் செய்யலாம் இதுசீச்சீ

**வடிவேலு**

காற்றோ கடுங்காற்று கண்டாயா ஒருசெத்தல்
தேங்காயுடன் சேர்ந்து பன்னாடை விழுகிறது
அப்பாலே வந்து நின்று அண்ணாந்து அவதானி
அதிலென்ன தாற்பரியம் அறியத் தருகின்றேன்



- வெறுப்புணர்வுகளை விட்டுவிடுங்கள்
  அவை வெறுக்கப்பட்டவைகளை அல்ல.
  வெறுப்பவர்ளையே சுடும்.
- துன்பம் வந்தும் சோர்வு இல்லாதவனைப்பகைவனும் மதிப்பான்.
- கடவுள் மாதம் தோறும் சம்பளம் கொடுப்பதில்லை.
  அவரின் சம்பளம் வாழ்க்கையின் முடிவிலேயே
  வழங்கப்படுகிறது.
- தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ அங்குதான்
  ஒழுக்கம் ஆரம்பமாகிறது.

**சிந்திப்பதற்காக அல்ல**
செயலாற்றுவதற்கு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ. சிவானந்தன்

**கந்தையா**

விஞ்ஞானம் இங்கேயும் விளக்கங்கள்
சொல்லிடுமோ?

**வடிவேலு**

விஞ்ஞானி நியூட்டனுடை இயக்கவிதி
மூன்றுண்டு
புறவிசைகள் ஏதேனும் தலையிடுதல்
இல்லையெனில்
கிடந்தது கிடக்கும் நடந்தது நடக்கும்
பறந்தது பறக்கும் என்பதோர் விதியாகும்

**கந்தையா**


செத்துவிழும் தேங்காய்க்கும் இத்தகைய
தோர்விதிக்கும் எத்தகைய தொடர்புண்டோ
இதைச்சொல்லேன்

**வடிவேலு**

தாக்கத்திற் கொப்ப வொரு மறுதாக்கம் சம
அளவில் எதிரெதிரே இருக்கும் என்ப
தின்னுமொரு விதியாகும்
தேங்காயை நெட்டொன்று மேலே
இழுத்திருக்க
பொருளினைப் பூமியது கவருகிற
தன்மையினால்
தேங்காயோ நெட்டுதனைக் கீழே
இழுக்கிறது
இவ்வாறே தாக்கத்தோடெதிரத்
தாக்கம் சமனாகித் தென்னைமர
வட்டினிலே தேங்காய் இருக்கிறது. நீர்வற்றக்
குறைவுபடும் நெட்டிலுள்ள இழுவையினைப்
புவிஈர்க்கும் விசைமிஞ்சிப் போவதனாற் றான்
தேங்காய் மேனோக்கிப் போகாது நிலம்
நோக்கி வீழ்கிறது

**கந்தையா**

தேங்காயுடன் ஒன்றாய்க் குரும்பட்டி
விழும்போது பன்னாடை மட்டுமேன் மெதுவாக
விழுகிறது



**வடிவேலு**

தேங்காயின் பாரத்தை எதிர்க்கின்ற காற்றதிகம்
குரும்பட்டி யினை உதைக்கும் காற்றளவு
மிகச்சிறிதே

**கந்தையா**

விரலுக்குத் தக்கதுதான் வீக்கம் அதனாலே
விழுகின்றன போலும் இரண்டுமே ஒன்றாக

**வடிவேலு**

பன்னாடை பரப்பதனை உதைக்கின்ற
காற்றதிகம்
தேங்காயை உதைக்கின்ற
காற்றமுக்கம் மிகக்குறைவு
பன்னாடை பாரம் வலு குறைவு
தேங்காயோ எந்நாளும் நல்ல
கடும் பாரம் ஆதலினால்
தேங்காயின் ஈர்ப்புவிசை
பன்னாடை ஈர்ப்பைவிடப்
பெரிதாகும் இதனாலே காற்றினது
மேலுதைப்புப்
பன்னாடை ஈர்ப்புதனைப் பாதிக்கும் அளவுக்குத்
தேங்காயின் ஈர்ப்பதனைப் பாதிக்க மாட்டாது

**கந்தையா**

அருமைதான் நீ சொன்ன அவ்வளவும்
இன்றைக்கு
முருங்கைக்காய் விற்பதற்குச் சந்தைக்குப்
போகவேணும்



**ஒருவர் :** உங்க பையன் இத்தனை புத்தகங்களையும் தூக்கிக் கொண்டு பள்ளிக்குப் போறானே பாரமா இல்லையா..?

**மற்றவர்:** பாரம் தான். எனக்கும் பார்க்க பாவமாய்த்தான் இருக்கு. ஆனா அவன் படிக்காமவிட்டாலும் ஒரு தொழிலை பழகிக்கொள்ளுறான் தானே..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகளின் உயர்வுக்கு உதவ வாரீர்..



அன்புக்குரிய பெற்றோரே! ஆசிரியர்களே!

எங்கள் பிள்ளைகள் எமது பிரதேசத்தின் செல்வங்கள் அவர்களின் வளரச்சியும் உயர்ச்சியுமே எங்கள் வாழ்க்கை எனவே அவர்களை வளர்த்தெடுப்பதும் அவர்களின் சாதனைகளைப் பாராட்டுவதும் எங்களின் கடமை அவர்களின் உயர்ச்சிக்கு உதவுதலும் ஊக்குவித்தலும் அவசியமாகிறது நல்ல ஆரோக்கியமான உடலும் நல்லொழுக்கம் பேணும் உள்ளமும் ஒவ்வொருவருக்கும் வேண்டும் அந்த வகையில் பிள்ளைகளில் நாம் கொண்டுள்ள கரிசனையை வெளிப்படுத்துவோம் உங்கள் சுற்றயலில் ஆற்றல் அறிவுத்திறன் கொண்டு பிரகாசிக்கும் எங்கள் பிள்ளைகளைப் பற்றிய தகவல்களை அர்ச்சுனாவுக்குத் தெரியத் தாருங்கள் அதன் மூலம் எங்கள் பிள்ளைகளைப் பாராட்டவும் அவர்களை ஊக்குவிக்கவும் அரச்சுனாவுடன் இணைந்து கொள்ளுங்கள்.

ஆசிரியர்

---

# ஒரு கிழவர்

■ சபா ஜெயராசா

அன்று திங்கட்கிழமைமணி எட்டாகி விட்டது நான் அப்பாவுடன் பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தேன் ஒழுங்கையின் ஓரத்தில் ஒருவர் படுத்திருந்தார் அவர் ஒரு கிழவர் மெலிந்த உடம்பு, கசங்கிய உடை, அழுதமுகம் தம்பி பசிக்கிறது நேற்று முழுவதும் சாப்பிடவில்லை களைப்பாய் இருக்கிறது என்றூர். அப்பாவும் நானும் அவரைப் பார்த்தோம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் அதுதான் நல்ல பழக்கம் என்றூர் அப்பா.

முன்னால் இருந்த கடைக்கு அப்பா போனார் அப்பம் வாழைப்பழம் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்தார் ஒரு போத்தலிலே தண்ணீரும் கொண்டு வந்தார். அவற்றைக் கிழவருக்குக் கொடுத்தார். கிழவர் எழுந்தார். கை கழுவினார். வாய் கொப்பளித்தார். அப்பத்தைச் சாப்பிட்டார். அவருடைய கை நடுங்கியது. அவருக்கு அவ்வளவு பசி. அவ்வளவு களைப்பு.



நான் வாழைப் பழத்தை எடுத்தேன். அதை உரித்தேன். அவருக்குக் கொடுத்தேன். கிழவர் ஆசையோடு வாங்கினார். சாப்பிட்டார். எங்களுக்கு அவர் நன்றி சொன்னார். நன்ருகப் படிக்க வேண்டும் பெரியவனாய் வரவேண்டும் என்று என்னை வாழ்த்தினார். அப்பாவுக்கும் நன்றி சொன்னார்.

எங்களுக்குப் பின்னால் ஆசிரியர் வந்தார் அவர் எல்லாவற்றையும் பார்த்தார் பள்ளிக்கு வந்து என்னைப் பாராட்டினார். எனக்காக ...ல்லா மாணவர்களையும் கைதட்டச் சொன்னார் எல்லோரும் பலமாகக் கைதட்டினார்கள் நானும் கைதட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்கள் கைவண்ணங்கள்




ந. அன்ரனி சாள்ஸ்
தரம் – 08
ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.



ரா. அனுஜன் தரம் – 03
கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.



ச. தனஞ்சன்
தரம் – 07 B
கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

## சோடி சேருங்கள்

கீழுள்ள மீன்களை கோடிட்டு சோடி சேருங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகன்




# வெசுவியஸ் எரிமலையின் சீற்றம். 1

எரிமலைகள் பூகம்பங்கள்
ஆழிப்பேரலைகள் சூறாவளிகள் திடீர்
வெள்ளப் பெருக்குகள் மற்றும்
காட்டுத் தீ போன்று அனர்த்தங்கள்
எம்மைப் பிரமிக்க வைக்கின்றன.
அத்துடன் அவை மோசமான
அழிவுகளையும் ஏற்படுத்துகின்றன.
இயற்கையின் எதிர்பாராத குறுகிய
கால மாற்றங்களால் ஏற்படும்
அழிவுகள் எம்மைப்
பயமுறுத்துகின்றன.
சகல விதமான நவீன வசதிகள்
வளங்கள் இருந்தும் கூட இயற்கை
அனர்த்தங்கள் இன்றும் மோசமான
சேதங்களை ஏற்படுத்துகின்றன.
வருடாவருடம் உலகின்
எங்கேயாயினும் சில பகுதிகளில்
இத்தகைய அனர்த்தங்களால்
கோடிக் கணக்கான மக்கள்
கொல்லப்பட்டும் காயமுற்றும்
வீடிழந்தும் சொத்திழந்தும்
அல்லலுறுகின்றனர்.
உலக வரலாற்றில் மிக மோசமான
அழிவுகளை ஏற்படுத்திய
அனர்த்தங்களில் ஒன்று வெசுவியஸ்
எரிமலையின் சீற்றம்.









கிறிஸ்த்துவுக்குப் பின் 79ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்தாலி நாட்டின் தென்புறத்தே பொம்பிஜி எனும் ரோமானிய நகரத்தில் வெசுவியஸ் மலையின் அடிவாரத்தில் மௌனமாக ஒரு எரிமலை உறங்கிக் கொண்டிருந்தது.

ஆவணி மாத வெயில் நகரை வாட்டிக் கொண்டிருந்தது. காலையிலும் மிதமான வெப்பம் நிலவியது.


வெப்பமான சூழ்நிலையிலுமஅந்நகரப்புறத் தெருக்கள் கடைகள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தன அங்குள்ள வெதுப்பகங்களில் உடனடியாகத் தயாரிக்கப்பட்ட ரொட்டிகளின் வாசனை காற்றிலே மிதந்து வந்து கொண்டிருந்தது. நடமாடும் தெருப்பாடகனின் இசை வெள்ளம் கடைகளுக்குச் செல்பவர்களின் காதுகளைக் குளிர்வித்தன.

உணவகத்தில் நின்ற பெண்கள் இருவர் தமது பிள்ளைகளுக்குச் சிற்றுண்டிகளை வாங்குவதற்காகக் காத்திருந்தனர். கடைவாசலில் ஒருவன் தனது செல்லப்பிராணியான அழகிய நாயொன்றைக் காத்திருக்க விட்டுச் சிற்றுண்டிக்காக வரிசையில் நின்றிருந்தான்.

மதுபானச் சாலைகள் மக்களால் நிறைந்திருந்தது. சிலர் அன்றைய தினம் மாலையில் விளையாட்டரங்கில் நடைபெறவிருந்த போட்டிகள் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை அனர்த்தங்கள்

விளையாட்டரங்கு என்பது கிளாடியேற்றர் என அழைக்கப்பட்டது அதில் பயிற்சி பெற்ற போர்வீரர்கள் ஒருவருக்கொருவர் மோதிச் சண்டையிடுவதைப் பார்த்துக் களிப்பதற்பாக இரத்தவெறி கொண்ட இரசிகர்கள் கூடும் இடம் அது.

பிரமாண்டமான மைதானம் அதனைச் சுற்றி வட்ட வடிவில் அடுக்கடுக்காகப் பல்லாயிரக் கணக்கான இருக்கைகள் போடப்பட்டிருக்கும் கூரையற்ற கட்டிடம் இப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் சில சந்தர்ப்பங்களில் மரணிப்பதுமுண்டு.

அன்று அந்நேரத்தில் அவர்கள் நின்றிருந்த நிலம் அதிர்ந்தது. உணவகத்தின் வாசலில் நின்ற பெண்களிடத்தில் கலவரம் நிறைய ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இது மற்றுமொரு பூகம்பமாக இருக்குமோ? அப்பகுதியில் இவ்வாறான பூமியதிர்வுகள் வழமையானவை. ஆனால் அவை பெரிய சேதங்களை ஏற்படுத்தியதில்லை.

திடீரெனக் காதைச் செவிடாக்கும் வகையில் முழக்கம் கேட்டது. வெசுவியஸ் மலை உச்சியில் தூங்கிக் கொண்டிருந்த எரிமலை வெடித்துக் கிளம்பியது. சீற்றம் கொண்டு குமுறத் தொடங்கியது. அதிகூடிய வெப்பத்துடன் தீப்பிழம்புகளும் புகையும் பரவ திரவ நிலையடைந்த தீக்குழம்பு வெளியே தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. தீ நாக்குகள் மேலே உயர்ந்து தோன்றின. அத்துடன் பிரமாண்டமான கரிய முகிற் கூட்டங்கள் ஆகாயத்தை நோக்கி உயர்ந்தன. வெடிப்பின் தாக்கத்தினால் பூமி அதிர்ந்தது.

மக்கள் திகைப்பில் மலைத்துப் போயினர். பயத்தால் ஒருவரையொருவர் பற்றிப்பிடித்தனர். உணவகங்களில் நின்ற பெண்கள் தமது பிள்ளைகளை இழுத்துத் தம்மோடு அணைத்துக் கொண்டனர். நாய்கள் மோசமாகக் குரைத்தபடி தமது கழுத்து வார்ப்பட்டைகளை அறுத்துக் கொண்டோட முயன்றன.

மதுபானச்சாலைகள் வெறிச்சோடின.

கட்டிடங்கள் நொருங்கி விழக்கூடும் என்ற அச்சத்தால் மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியே ஓடினர்.

அது பகல் வேளையாக இருந்தது எரிமலையில் இருந்து கிழம்பிய சாம்பலும் புகையும் வானவெளியை மூடியதால் பொம்பிஜி நகரை இருள் சூழ்ந்து கொண்டது. ஆங்காங்கே சாம்பல் முகிற்கூட்டங்களிடையே மின்னல் வளைந்து வளைந்து கோடிட்டன.

அந்த நேரத்தில் தணல் போன்ற சாம்பல் துணுக்குகள் ஒரு டென்னிஸ் பந்தின் அளவான பாறைக் கற்களாய் ஆகாயத்தில் உயர்ந்து மழைபோல் கீழே பொழிந்தன.

பீதியடைந்த மக்கள் இருளடைந்த அந்த வீதிகளினூடாகக் கூக்குரலெழுப்பியபடி ஓடினர். கடைகள் கட்டிடங்கள் தலைகீழாகப் புரட்டப்பட்டுச் சிதறின. மரக்கறிகள் பழங்கள் என்பன ஓடும் மக்களின் கால்களுள் மிதியுண்டு துவம்சமாயின. செய்வதறியாது மக்கள் திசை தெரியா நோக்கில் சிதறி ஓடினர்.

விளையாட்டரங்கில் அன்றைய மாலைப்போட்டிக்கான பயிற்சிகளைச் செய்திருந்தோர் அவற்றை நிறுத்தி அனைத்தையும் கைவிட்டு அலறிக் கொண்டு ஓடினர்.

சிலர் தம்மிடமிருந்த பெறுமதியான பொருட்களைக் காப்பாற்ற எண்ணி விரைந்தனர் தெருக்களில் ஓடிக்கொண்டிருந்தோர் உயிரைக் காப்பாற்றத் தமது தலைகளை மறைக்க மெத்தைகளையும் துவாய்களையும் போட்டு மூடிக் கொண்டே ஓடினர்.

சீற்றம் தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Black

## உலகப் பிரபல்யமானவர்களை கீழ்க்காணும் ஒரே படத்தில் காணலாம்.

அவர்களை அடையாளம் காண முடிகிறதா..? முயற்சியுங்கள்



## விடுகதைகள்

1 ஒல்லியாய் இருப்பான். உரசிச் சிரிப்பான். உயிரைக் கொடுப்பான். ஒளியும் கொடுப்பான் அவன் யார்?



2 சின்னச்சின்ன அறைகள் உண்டு. சித்திரக்கணக்கு வடிவம் உண்டு. காவலுக்கோ கன பேருண்டு. எம்மால் கட்ட முடியாக் கல்வீடுதான் என்ன?

3 ஏறிக் கனிபறிக்க இயலாத வழுக்கு மரம். கனி இனிக்கும், காய் துவர்க்கும், இலை உணவுண்ண எமக்குதவும் அது என்ன?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Black



விடைகள் 23 ஆம் பக்கத்தில்

4 காலின்றி ஓடிடுவான் கண்டவரை
நடுங்க வைப்பான் வாலுண்டு
தலையுண்டு வணங்குபவர்
சிலருண்டு அவன் யார்?



5 வாலில்லை காலில்லைத் தலையில்லை
முகமுண்டு பேசுவான் பாடுவான் பேசாமலும்
இருப்பான் அவன் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாலா கம்சத்வனி**



மகதநாட்டு மன்னர் அயல் நாட்டில் ஆட்சி செய்த ராஜசிம் மனை வெற்றி கொண்டு சிறைப் பிடித்திருந்தார்

வெற்றிப் பெருமித்தில் ஒரு நாள் தனது அமைச்சரைப் பார்த்து "மந்திரியாரே நம்மிடம் தோற்றுப் போய் சிறைப்பட்டிருக்கும் எமது எதிரி நாட்டரசர் ராஜசிம்மன் எப்படி இருக்கிறார்" என்று கேட்டார்..

அதற்கு அமைச்சர் "அரசே எதிரிநாட்டரசர் நம்மிடம் தோல்வியுற்றுச் சிறைப்பட்டிருப்பதை வைத்துக் கொண்டு நாம் அவரைச் சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது. ராஜசிம்மர் வில்வித்தையில் வல்லவர். அவரது குறி ஒருபோதும் தவறாது. நாம் கூட போரில் நேர்வழியில் தோற்கடிக்கவில்லையே அவரைச் சேர்ந்த கைக்கூலி ஒருவன் காட்டிக் கொடுத்தமையாலேயே நாமும் அவரைக் கைது செய்தோம். அவருடன் போரிட்டு வெற்றி கொள்வது இயலாத காரியமே" என்று ராஜசிம்மனின் வீரத் தைப் புகழ்ந்து பேசினார்.

அதனைக் கேட்ட மகத நாட்டு மன்னர் கேலியாக "ராஜசிம்மன் அவ்வளவு பராக்கிரம சாலியா? அதனால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது எம்மிடம் சிறைப்பட்டிருக்கிறாரா? அவரது வில்லாண்மையை எம்முன் நாம் சோதித்துப் பார்ப்போமே? உடனேயே ராஜசிம்மனை இங்கு இழுத்து வாருங்கள்" என்றார்.

"சோதனை வேண்டாம் அரசே, ராஜசிம்மன் அடிபட்ட புலி ராஜசிம்மனுடன் போரிட்டு வெல்வதென்பது இயலாத காரியம். அவரைச் சிறைப் பிடிப்பதோ ஜெயிப்பதோ நாம் கனவில் கூட நினைத்துப் பார்க்க இயலாத விஷயம். ஏதோ சூழ்ச்சியால் அதனைச் சாதித்து விட்டோம் இதற்கு மேலும் ராஜசிம்மனுடன் விளையாட்டு வேண்டாம். விளையாட்டே எமக்கு வினையாகவும் முடியலாம். அவரின் வில் வித்தையைப் பரீட்சித்தல் எமக்கு விஷப் பரீட்சையாகவும் நேர்ந்து விடலாம். வேண்டவே வேண்டாம் இந்தப் பரீட்சை" என அமைச்சர் அரசரை மன்றாடினார்.

ஆனால் அரசரின் பிடிவாதத்தால் நடப்பது நடக்கட்டும் என்று அமைச்சர் அதற்குமேல் எதுவும் பேசாமல் இருந்துவிட்டார்

"ராஜசிம்மன் இப்பொழுது நமது சிறைக் கைதி. அவனால் என்ன செய்துவிட முடியும். உங்களின் பயம் என்னை இழிவு படுத்துகிறது. அவன் தோற்றாலும் அவனே வீரன் என்பது போலல்லவா பேசுகிறீர்கள். இதனை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ராஜசிம்மனின் வில்லாண்மையைச் சோதித்துப் பார்த்தே ஆக வேண்டும்" என்று கூறி அரசசபைக்கு ராஜசிம்மனை அழைத்துவர வீரர்களை அனுப்பினார் அரசர்.

உடனேயே சிறைச்சாலைக்குச் சென்ற வீரர்கள் "ராஜசிம்மரே நீர் எம்முடன் அரசசபைக்கு வரவேண்டும் உங்கள் வில்லாண்மையை எங்கள் அரசர் சோதித்துப் பார்க்க விரும்புகிறார்" என்றனர்

"என் வில்லாண்மையை உங்கள் அரசர் போர்க்களத்திலே பார்த்திருக்கலாமே?"

"எங்கள் அரசர் போர்களத்திற்கு வந்திருந்தாலல்லவா உங்கள் வில்லாண்மையைப் பார்த்திருக்க முடியும். எங்கள் அரசரோ போர்க்களத்திற்குச் செல்லவில்லையே படைத்தளபதிகளையே அனுப்பியிருந்தார். அவர்களால் முடியாது போனால் மாத்திரமே தான் கலந்து கொள்வதாகச் சொல்லியிருந்தார். ஆனால் அதற்கு அவசியமில்லாமல் போய்விட்டதே"

"என் வில்லாண்மை என்ன உங்கள் அரசருக்கு விளையாட்டுப் பொருளாகிவிட்டதா? அதற்கு நான் தயாரில்லை. நான் உங்கள் சிறைக் கைதிதானே தவிர அடிமையல்ல." என்று கூறி ராஜசிம்மர் அரசர் முன் செல்ல மறுத்தார்

"நீங்கள் வரமறுத்தால் உங்களைப் பலவந்தமாகக் கட்டி இழுத்துச் செல்ல நேரலாம் நீங்களும் ஓர் அரசர் நாங்கள் அரசரின் கட்டளைப்படி செய்யாவிட்டால் எங்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதும் தங்களுக்குத் தெரியும் எனவே எங்கள் தலையைக் காப்பாற்றுவதற்காகவாவது நீங்கள் வரத்தான் வேண்டும்" என வேண்டினர்.



# பொய்மை விளைத்த புகழ் நிலைக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் வேறுவழியின்றி ராஜசிம்மன் அரசசபைக்குச் சென்றார்.

அங்கே கொலுவிருந்த மகத நாட்டு மன்னன் "ராஜசிம்மரே நீங்கள் வில்லாண்மையில் வல்லவராமே அதைப் பரீட்சித்துப் பார்க்கவே உம்மை அழைத்தேன்" என்று சொன்னான் அதற்கு எதுவித பதிலும் சொல்ல விரும்பாத ராஜசிம்மன் தனது விதியை நொந்து கொண்டு தனது வில்லாண்மையை வெளிக்காட்டிப் பலதிறன் கொண்டு, அம்பெய்து நின்றான். அதனைப் பார்த்து அரசன் வியப்படைந்தான். ஆனால் எதிலும் திருப்தியடையாமல் ராஜசிம்மனைத் தோல்வியடையச் செய்யும் எண்ணத்தோடு ஓர் ஆட்டை அரண்மனைக்குள் நிறுத்தி,

"கண்களை இறுகக் கட்டிக் கொண்டு இங்கே நிறுத்தப்பட்டுள்ள ஆடு நிற்கும் திசையைக் கண்டறிந்து அதனை அம்பெய்து கொல்ல வேண்டும்" என்றான்

ராஜசிம்மனோ, நீதியற்ற ஓர் அரசன் முன்னே அவமானப்பட விரும்பவில்லை தனது வில்லாண்மையை வெளிக்காட்ட ஓர் ஆட்டைக் கொல்ல வேண்டியுள்ளதே என வருந்தினார்

ராஜசிம்மனின் கண்கள் கட்டப்பட்டன. ஆடு "மே, மே" என்று அது நின்ற திசையில் இருந்து கத்தியது. அதைக் கேட்ட அரசர் "ஆ" என எதையோ சொல்ல முயன்றார். உடனே தான் நிற்கும் இடமும் ஆடு கத்தும் இடமும் அரசர் இருக்கும் இடமும் தெரிந்த வேகத்தில் அம்பு குறி தவறாமல் அரசரின் மார்பில் பாய்ந்தது.


ராஜசிம்மனைத் தந்திரத்தால் கைது செய்து வென்ற மகத நாட்டு மன்னன் தனது விளையாட்டு வினையானதால் மாண்டு போனான். பொய்யான பெருமையும் புகழும் நிலைப்பதில்லை.




வாய்மை என்றும் வெல்லும் ராஜசிம்மன் மீண்டும் தனது நாட்டில் மகிழ்ச்சி பரவ ஆட்சி செய்தான்.



# இலக்கு




இலக்கில்லாத முயற்சி
சிறகில்லாத பறவை
நூலில்லாத பட்டம் பயன்படப்போவதில்லை.
எறும்புதான் உலகிலேயே அதிகமாக
உழைக்கும் உயிர் அதனிடம் உருவமும்
பலமுமில்லை.
விடாமுயற்சியும் தொடர்ந்த உழைப்புமே
அதன் பலம்.
உழைத்துப் பெறாத செல்வம்
நிலைத்திருக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ல் மார்க்ஸ்

தே. கஜார்த்தன்



**1835ஆம்** ஆண்டு ஆவணியில் தனது பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியே செல்வதற்கு முன்னர் ஒரு வாழ்க்கைத் தொழிலை விரும்பித் தெரிந்தெடுப்பதில் ஒரு இளைஞனின் பிரதிபலிப்புகள் என்ற தலைப்பில் கார்ல் மார்க்ஸ் எழுதிய கட்டுரையில் இருந்து சில வாக்கியங்கள்

மனிதகுலத்திற்காக வாழ்நாளில் பெரும்பாலும் சேவை செய்வதற்கான வகையில் நமது வாழ்க்கையில் ஒரு நல்வாய்ப்பு நிலையை நாம் தெரிந்தெடுத்து ஏற்பாடு செய்து கொண்டால் எத்தகைய சுமைகளும் நம்மை எதுவும் செய்துவிட முடியாது.

ஒருவர் தனக்காக மட்டும் வேலை செய்தால் அவர் ஒரு பெரிய படிப்பாளி என்றோ, பெரிய விஞ்ஞானி என்றோ, ஒரு சிறந்த கவிஞர் என்றோ பெரும் புகழ் மிக்கவராகலாம். ஆனால் அவர் ஒரு புகழ் மிக்க உண்மையான மகான் ஆக மாட்டார்

> மனிதர்களுக்குச் சேவை செய்வதற்கான வழிகளையும் சாதனைகளையும் தேடுவதற்கு முயற்சி செய்.

ஒரு வாழ்க்கைத் தொழிலைத் தெரிந்தெடுத்தல் என்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில் அதுதான் அவன் மனித குலத்திற்காகப் பணியாற்றுவதில் சிறந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடியதாகும்.

நான் என்கின்ற அகங்காரத் தற்பெருமையாகிய குறுகிய சிப்பிக்குள்ளே சுருங்கிக் கொண்டிருக்க வேண்டாம். மனிதர்களுக்குச் சேவை செய்வதற்கான வழிகளையும் சாதனைகளையும் தேடுவதற்கு முயற்சி செய்.


ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் ஒரு நிலைப்பாட்டைத் தேர்ந்தெடுத்து அந்தநிலை அவன் மனித குலத்திற்கு சிறந்த முறையில் சேவை செய்வதற்கு இடமளிக்குமானால் அவர் நான் என்னும் தற்பெருமையுடன் கூடிய குறுகிய சொந்தம் சுகம் மகிழ்ச்சி யைப்பற்றி அதிகமாக உணரமாட்டார் அதற்குப் பதிலாக அவருடைய மகிழ்ச்சி கோடிக்கணக்கான மக்களுக்குச் சொந்தமாக இருக்கும் •


# மரங்கள்

வி.என்.எஸ்.உதயச்சந்திரன்



தென்னை மரத்தை வளர்த்திடுவாய்
தேங்காய் ஓலை பெற்றிடுவாய்
பனை மரத்தை வளர்த்திடுவாய்
பயன்கள் யாவும் பெற்றிடுவாய்
மா மரத்தை வளர்த்திடுவாய்
மகிழ்ந்தே கனிகள் உண்டிடுவாய்
பலா மரத்தை வளர்த்திடுவாய்
பகிர்ந்து உண்டு மகிழ்ந்திடுவாய்
வாழை மரத்தை வளர்த்திடுவாய்
வளமாம் உடல்நலம் பெற்றிடுவாய்
பப்பாளி மரத்தை வளர்த்திடுவாய்
பளபள மேனி பெற்றிடுவாய்
பழமரங்கள் வளர்த்திடுவாய்
பல்லாண்டு நலமாய் வாழ்ந்திடுவாய்
வீட்டில் மரங்கள் வளர்த்திட்டால்
விளங்கும் நாடு செழிப்பாகும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரி போகுமிடம்



அவர் ஒரு சர்வாதிகாரி ஆழ்ந்த சிந்தனையுடன் தனது அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். சர்வாதிகாரிகளுக்கு நிம்மதி ஏது? எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்

அப்பொழுது எவரோ நடந்துவரும் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தார். வேகமாக வந்த சிறை அதிகாரி மிகவும் பணிவுடன் வணக்கம் செலுத்தினார்.

"என்ன விடயமாக வந்திருக்கிறாய்?" என அதிகாரத்துடன் கேட்டார் சர்வாதிகாரி

"சிறைச்சாலையில் ஒரு சிக்கல்" தயங்கித் தயங்கிப் பதில் சொன்னான் சிறை அதிகாரி சர்வாதிகாரி சற்றே கோபத்துடன் "விபரமாகச் சொல்" என்றார்.



"எல்லோருமே தங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வேண்டும் என்று போராட்டம் நடத்துகிறார்கள்" என்றார்

"அவ்வளவுதானே உடனேயே கொடுத்து விடுங்கள்". சர்வாதிகாரியின் உத்தரவை அடுத்து சிறைச்சாலையின் ஒவ்வோர் அறையிலும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டது

நாட்கள் கடந்தன.

ஒருநாள் அதே சிறைச்சாலை அதிகாரி மீண்டும் வந்தார். சர்வாதிகாரிக்கு வணக்கம் செலுத்தினார். தலைகுனிந்தபடி "சிறைச்சாலையில் மறுபடியும் போராட்டம் செய்கிறார்கள்" என்றார்.

"இப்பொழுது எதற்காகப் போராட்டம் நடத்துகிறார்கள் தொலைக்காட்சிப் பெட்டிதான் கொடுத்துவிட்டோமே" என்றார் சலிப்புடன்.

"இப்பொழுது வாரம் ஒரு நாள் கைதிகளுக்கு விடுமுறை வேண்டுமாம்"

"அட அவ்வளவுதானா? கொடுத்துவிடுங்கள்" என்று அலட்சியத்துடன் உத்தரவிட்டார் சர்வாதிகாரி.

இப்படியாகக் கைதிகள் கேட்ட வசதிகளை சிறிதும் தயக்கமில்லாமல் செய்து கொடுத்தார் சர்வாதிகாரி. இதனைக் கவனித்த அந்தத் தேசத்தின் தளபதி அவரது செய்கையைப் பார்த்துக் குழம்பினான். அது குறித்துச் சர்வாதிகாரியிடமே கேட்டுவிடுவதென முடிவு செய்தான்.

ஒருநாள் சர்வாதிகாரியைச் சந்தித்து "நாம் சலுகை காட்ட வேண்டியது கல்விச்சாலைகளுக்குத்தான் சிறைச்சாலைகளுக்கு அல்ல" என்றான் ஆவேசத்துடன்

ஆனால் சரவாதிகாரி அலட்டிக் கொள்ள வில்லை "தளபதியாரே பதவியிலிருந்து இறங்க வேண்டி நேர்ந்தால் நாம் பள்ளிக்கூடத்திற்கா போகப் போகிறோம்" என்று கேட்டுக் கொண்டே புன்னகைத்தார்.

புத்திசாலியான சர்வாதிகாரி போகப் போகும் இடத்தை முன்னரே அறிந்து வைத்திருக்கிறார். சராசரி மனிதரான தனக்கு அது எங்கே விளங்கப் போகிறது என்பதை எண்ணியபோது தளபதி ஆச்சரியமடைந்தான்

மனிதர்கள் பலர் தமக்கு எதிர்காலத்தில் நடக்கப் போகும் துயரமான நிகழ்வுகள் பற்றி அறியாமையாலேயே அதிகம் ஆட்டம் போடுகிறார்கள். நிகழ்காலத்தில் சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள். அதனால் எதிர்காலத்தை இழந்து விடுகிறார்கள். அதே போல எதிர்காலத்தைத் திட்டமிடாமையால் நிகழ்காலத்தைச் சிறப்பாக அனுபவிக்கவும் முடிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சுனா

## சிறுவர் வட்டம்



15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் அர்ச்சுனா வில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.



உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை கவிதை கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனாவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானாகவே எழுதினார் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

# அர்ச்சுனா

ARCHUNA

## சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : ..............................

..............................

வகுப்பு : ..............................

பிறந்த திகதி : ..............................

பாடசாலையின் பெயர் : ..............................

..............................

வீட்டு முகவரி : ..............................

..............................

.............................. ..............................

மாணவர் கையொப்பம் அதிபர் கையொப்பம்

# கற்றுக்கொள்ளுங்கள்

பாடத்திட்டங்களின் படி கற்றுத் தரப்படும் விடயங்களை கற்றுக்கொள்வதோடு கற்றலை நிறுத்தி விடாதீர்கள். பட்டங்கள் பெறுவதுடன் கல்வி முடிந்ததாக எண்ணி விடாதீர்கள்.

பாரம் தூக்கும் வீரனாக நீங்கள் புகழ் பெற்றாலும் விழுந்தவனைத் தூக்கி விடும் மனிதனாகப் புகழ் பெறுங்கள்.

பெரும் பதவிகளைத் தேடி நீங்கள் கற்றலை மேற்கொண்டாலும் அந்தப் பதவியின் மகிமையைக் குறைக்காமல் கடமையாற்றக் கற்றுக்கொள்ளுங்கள்.

கைதட்டலுக்காகவும் பாராட்டுக்காகவும் காத்திருக்காமல் உங்கள் பணியில் சிறப்பாக செயல் ஆற்றக் கற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் புத்தகக் கல்வியோடு நான் என்ற அகம்பாவத்தோடு வாழாமல் நாம் என்ற குரல் எழுப்பி அயலவனுக்கு உதவி வாழக் கற்றுக்கொள்ளுங்கள். பெயரும் புகழும் தலைமையும் பெறுவதற்காக அல்ல உலகை அன்பு செய்து ஒற்றுமையாக வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.



## விடைகள்

1. தீக்குச்சி
2. தேன்கூடு
3. வாழைமரம்
4. பாம்பு
5. வானொலி



பொய் சொல்லிப் பரிசு பெறுவதை விட உண்மை பேசித் துன்பத்தை ஏற்பது மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 1000 ரூபாய்

நா. இராமச்சந்திரன்

**ஒரு** பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பேச்சாளர் பேச ஆரம்பிக்கிறார். அவர் தன்னுடைய பேச்சை எப்படி ஆரம்பித்தார் தெரியுமா?

ஒரு ஆயிரம் ரூபாய்த் தாளைத் தன் கையில் எடுத்தார். அது ஒரு புத்தம் புதிய தாள் அதை அவர் எல்லோருக்கும் தெரிவது போல் கையில் எடுத்து உயர்த்திப் பிடித்தார்!

எதிரில் இரு நூறு பேர் வரையில் உட்கார்ந்திருக்கிறார்கள்.. எல்லோருரையும் பார்த்து அந்தப் பேச்சாளர் இந்த ஆயிரம் ரூபாய்த் தாளை விரும்புகிறவர்கள் யார்?

என்று கேட்டார்.

அவ்வளவு தான்!

அங்கிருந்த அத்தனை பேரும் கையைத் தூக்கினார்கள். இந்த ஆயிரம் ரூபாய் தாளை உங்களில் ஒருவருக்கு கொடுக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு.. அவர் அந்தத் தாளைத் தனது கையால் நன்றாகக் கசக்கினார்.

பிறகு அவர். இப்போது பாருங்கள்.. அந்தக் கசங்கிய தாளை! இப்போதும் இதை விரும்புகிறவர்கள் யாராவது இருக்கிறீர்களா? என்று கேட்டார்.

தூக்கிய கையை எவருமே இறக்கவில்லை. அப்படியே வைத்திருந்தார்கள்

பேச்சாளர் பார்த்தார்

சரி... இப்படிச் செய்தால் என்ன? என்று சொல்லிவிட்டு அந்தத் தாளை கீழே மண்ணில் போட்டார்.

தன்னுடைய சப்பாத்துக் காலால் அதை மிதித்தார் அங்கும் இங்குமாக அதைத் தேய்த்தார். இப்பொழுது அந்தத் தாளோ கசங்கிச் சுருங்கியது மீண்டும் அதனை கையில் எடுத்தார். உயரத்தில் பிடித்தார்.

இப்போது சொல்லுங்கள் இப்போதும் இதை விரும்புகிறவார்கள் இருக்கிறீர்களா? என்று கேட்டார்.

அப்பொழுதும் அவர்கள் தாங்கள் உயர்த்திய கையைக் கீழே போடவில்லை.

இப்பொழுது அந்தப் பேச்சாளர் பேச ஆரம்பித்தார்.

அருமை நண்பர்களே. இப்போது நீங்கள் அனைவரும் ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக் கொண்டுள்ளீர்கள் இந்தப் பணத்தை நான் கசக்கினேன் காலில் போட்டு மிதித்தேன் அதனால் அது தனது அழகை இழந்தது. மிகவும் கசங்கி அழுக்கடைந்தது. ஆனால் அதைப் பலரும் விரும்புகிறீர்கள். அதேபோல் நாம் எதற்கும் பயனற்றவர்கள் என எண்ணுகிறோம் நமக்கு மரியாதை இல்லை! என்று நினைக்கிறோம்.

ஆனால் உண்மைஎன்ன தெரியுமா? ஏற்கனவே எது நடந்திருந்தாலும் இனி மேல் எது நடக்கப் போவதாக இருந்தாலும் அதனால் நம்முடைய மதிப்பில் நாம் குறைந்துவிடப் போவதில்லை துன்பம் வரும் போது மதிப்பு குறைந்து விட்டதாக நினைத்து யாரும் மனம் உடைந்து போய்விடாதீர்கள்.

நீங்கள் ஒரு தனித் தன்மை உள்ளவர். உங்களிடம் ஒரு தனித்துவமும் உண்டு. அது வேறு எவரிடமும் இருக்காது. இந்த உண்மையை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

நாளைய எதிர்ப்பார்ப்புகளை நேற்றைய ஏமாற்றங் கள் அழுக்குப்படுத்துவதற்கு இடம் கொடுத்துவிடாதீர்கள்.

நாம் எமது வாழ்க்கை யைச் சரியாகப் புரிந்துகொண்டால் சங்கடமில்லை. நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் நம்முடைய மதிப்பைக் குறைத்து விடுவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று அந்தப் பேச்சாளர் சொல்லி முடித்தார். எமது உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே காரணமென்பதால் எமது மதிப்பை உயர்த்தும் வகையில் எமது செயற்பாடுகளில் தூய்மை இருக்குமானால் வெளித்தாக்கங்கள் எதுவும் எமது மதிப்பைக் குறைத்து விடப்போவதில்லை.

---

**அர்ச்சுனா**

**சிறுவர் வட்டம்**

ARCHUNA

அன்பான பிள்ளைகளே

உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை அனைத்தையும் அர்ச்சுனா தனது பக்கங்களில் சேர்த்து கொள்ளுவான்.

அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புதிய படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் அழகிய நிழற்படத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்



தொடர்புகளுக்கு :

ஆசிரியர்

அர்ச்சுனா, சிறுவர் வட்டம்

361 கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைக்குடும்பத்தில் பிறந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பதினாறாவது ஜனாதிபதியானார் ஆபிரகாம் லிங்கன். ஆனால் அமெரிக்காவின் முப்பத்தைந் தாவது ஜனாதிபதியான ஜோன் எவ் கென்னடியோ பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர்.

அமெரிக்க ஜனாதிபதிகளுள் ஜோன் எவ் கென்னடி ஒருவரே றோமன் கத்தோலிக்க கிறிஸ் த்தவ மதத்தைச் சேர்ந்தவர் மிகவும் இளவயதில் ஜனாதிபதியான பெருமையும் அவருக்கு உண்டு.

இந்த இருவரின் வாழ்க்கையிலும் ஒரேவிதமான சிறப்பு நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றுள்ளன.


இவர்கள் இருவரும் அமெரிக்காவின் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

ஜோன் வில்க்ஸ் பூத் என்பவன் 1839இல் பிறந்தவன். லீ ஹார்வி ஒஸ்வால்ட் என்பவன் 1939இல் பிறந்தவன்.

இங்கு இருவரின் பிறப்பிலும் நூறு ஆண்டுகள் வித்தியாசம் உண்டு. இரண்டு கொலையாளிக ளுமே பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆபிரகாம் லிங்கனின் அந்தரங்கச் செயலா ளரின் பெயர் கென்னடி. ஜோன் எவ் கென் னடியின் அந்தரங்கச் செயலாளரின் பெயர் ஆபிர காம் லிங்கன்.

# ஆபிரகாம் லிங்கனும் ஜோன் எவ். கென்னடியும்



ஆபிரகாம் லிங்கன்



ஆபிரகாம் லிங்களின் அந்தரங்கச் செயலாளரின் பெயர் கென்னடி. ஜோன் எவ் கென்னடியின் அந்தரங்கச் செயலாளரின் பெயர் ஆபிரகாம் லிங்கன்.



ஜோன் எவ். கென்னடி

கிறிஸ்த்துவுக்குப் பின் 1861இல் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியானார். 1961இல் ஜோன் எவ் கென்னடி ஜனாதிபதியானார் இந்த இடைவெளி சரியாக நூறு ஆண்டுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இருவரும் ஜனாதிபதியாகப் பதவியில் இருக் கும்போதே உயிரிழந்தனர் அதுவும் அவர்களின் மனைவியரின் முன்னிலையிலேயே ஒரு வெள்ளிக் கிழமை நாளில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆபிரகாம் லிங்கன் "போர்ட்" தியேட்டரில் நாடகம் பார்த்துக்கொண்டிருக்கும் போது சுடப்பட்டார். கென்னடி "போர்ட்" கம்பனியின் தயாரிப்பான ஒரு காரில் பயணம் செய்தபோது கொல்லப்பட்டார்.

ஜோன் வில்க்ஸ் பூத் என்பவன் 1865ஆம் ஆண்டில் ஆபிரகாம் லிங்கனைச் சுட்டுக் கொன்றான்.

1963ஆம் ஆண்டு லீ ஹார்வி ஒஸ்வால்ட் கென்னடியைச் சுட்டுக் கொன்றான்.

இரு ஜனாதிபதிகளும் தாங்கள் ஜனாதிபதியாக வெள்ளை மாளிகையில் வாழ்ந்த காலத்தில் ஆளுக்கொரு மகனை இழந்தனர்.

ஆபிரகாம் லிங்கனும், ஜோன் எவ் கென்னடியும் அமெரிக்க கறுப்பின மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தனர்.

இரு ஜனாதிபதிகளின் இறப்புக்குப்பின்னராக அவர்களது துணை ஜனாதிபதிகளாகவிருந்து பதவி ஏற்ற ஜனாதிபதிகள் இருவரதும் குடும்பப் பெயர் ஜோன்சன் என்பதாகும்.

அன்ட்ரூ ஜோன்சன் ஆபிரகாம் இலிங்கனுக்குப் பின்னரும் லிண்டன் ஜோன்சன் கென்னடிக்குப் பின்னரும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றனர்.

அன்ட்ரூ ஜோன்சன் 1808இல் பிறந்தவர். லிண்டன் ஜோன்சன் 1908இல் பிறந்தவர்.

இங்கு சரியாக நூற்றாண்டுகள் வித்தியாசம் இருப்பதை அவதானிக்கலாம்.


பா. ஆரணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம் தீட்டி மகிழுங்கள்

# உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இராவனின் நுண்ணறிவுப் பரிசோதனை

1




மேலே தரப்பட்டுள்ள படத்தில் A என்ற பகுதி வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பொருத்தமான படத்தை
கீழே உள்ள 1, 2, 3, 4, 5, 6 என இலக்கமிடப்பட்ட
படங்களிலிருந்து தெரிவு செய்து இணையுங்கள்.






## சரியான மதிப்பு



தைமூர் ஒரு கொடுங்கோல் மன்னன் அவன் ஒரு முறை தன் அரசவைக் கவிஞரான கிர்மானியிடம் எனது விலை மதிப்பு என்ன? என்று கேட்டான்.

கிர்மானி உங்கள் மதிப்பு 25 ரூபாய் என்று சொன்னார்.

தைமூர் என் இடுப்பிலுள்ள கச்சையின் விலையே 25ரூபாய் பெறுமதியுடையது என்றார்.

அதற்குத்தான் நானும் மதிப்புப் போட்டேன் என்றார் கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சுனா தரும்

# சொற்கோலம்

## திறனாய்வு இலக்கம் ।



திறனாய்வு இல. । க்கான விடைகளை தங்கள் பெயர் முகவரியுடன் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக இம் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சொற்கோலம்
அர்ச்சுனா
36। கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

### இடமிருந்து வலமாக

1. உவமித்தல்
4. சிறையில் அடைக்கப்பட்டவன்
5. ஓர் இனிப்புப் பண்டம்
6. இல்லை எனபதன் எதிர்ப்பதம்
7. விசமுள்ள பிராணி கொட்டுவது
8. அறிஞன்
9. அடையாளம் / அடுத்தது
10. உண்ணாமல் இருத்தல்
12. கோடையில் ஏற்படுவது
13. முருங்கை இனம் ஒன்று
15. அரசன்
16. நாள்

### மேலிருந்து கீழாக

1. பூமி
2. அடைவு மீட்கப்படும்போது இதுவும் அறவிடப்படும்
3. மிருகங்களில் ஒன்று
4. பிரதி உபகாரம்
6. பண்டைக்கால மனிதன்
8. ஆட்சியை மாற்றப் பலநாடுகளில் புலவடிவங்களில் மேற்கொள்ளப்பட்டது
10. வானத்தில் பறப்பது
11. ஓர் இந்திய திரைப்பட நடிகை
12. இது இல்லாவிட்டால் மகிழ்ச்சி இருக்காது
14. காடு
15. மலைக்கு எதிரானது



# துயரம் ஓட்டிடுவேன்

■ உமாபாரதி

காலையிலே நான் கண்விழிப்பேன்
கடமைகள் பலவும் செய்திடுவேன்
சோலை மலர்போல் சிரித்திடுவேன்
சுறுசுறுப்பாக உலவிடுவேன்

வேளைக்கே நான் பள்ளி செல்வேன்
விவேகத்துடனே கற்றிடுவேன்
நாளை உலகை நவமாக்கும்
நலமாம் பணிகள் செய்திடுவேன்

கற்றோன் என்ற பட்டத்தைக்
காவித் திரிதல் விட்டிடுவேன்
சுற்றம் வாழக் கற்றதுபோல்
சூழும் துயரம் ஓட்டிடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஸ்ரீராமரோ, ஆஞ்சநேயர் மீதில் அம்புகளைச் செலுத்தினார். அவை ஆஞ்சநேயரை எதுவும் செய்யவில்லை. ராமநாமம் ஆஞ்ச நேயரைச் சூழ்ந்திருந்தது.



12. அப்போது அது கண்ட விசுவாமித்திரர் நிலையைப் புரிந்து கொண்டு சகுந்தனை மன்னித்தார். சகுத்தனைத் தவறாக எண்ணியமையும் பிழை என்பதைப் புரிந்து கொண்டார்.



13. விசுவாமித்திரர் ஸ்ரீராமருக்கு உண்மையை விளக்கினார். ஸ்ரீராமர் ஆஞ்சநேயரைப் பாராட்டினார்.




ஆஞ்சநேயரின் ராமபக்தியையும் ராமநாமத்தின் மகிமையை உணர்த்தும் நிகழ்ச்சியே இது.



32
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org